**இலங்கை தேயிலைச் சபை - 2011**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, இலங்கை தேயிலைச் சபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க மானியங்களாகக் கிடைத்த ரூபா 4,950,000 பெறுமதியான இரண்டு மோட்டார் வாகனங்கள், ஐந்தொகையில் அரசாங்க மானியங்களாகப் புறம்பாகக் காட்டப்படுவதற்குப் பதிலாக நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2011 திசெம்பர் மாதத்திற்காகக் செலுத்தப்படவேண்டிய ரூபா 1,350,250 தொகையான ஊழியர் சேமலாப நிதிய உதவு தொகை மீளாய்வாண்டிற்கான கணக்குகளில் அட்டுறு செலவுகளாகக் கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

(இ) 2011 திசெம்பர் மாதத்திற்கான ரூபா 72,495 தொகையான ஊழியர் நம்பிக்கை நிதிய உதவுதொகை ஊழியர் நம்பிக்கை நிதியக் கணக்கிற்கு வரவு வைக்கப்படுவதற்குப் பதிலாக ஊழியர் சேமலாபநிதியக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) சபையின் மிகை நிதிகளாக ரூபா 50.337 மில்லியன் தொகை திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 50 மில்லியன் மட்டுமே மூலதனக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்ததுடன் மிகுதி முதலீட்டு வட்டிக் கணக்கிற்கு வரவுவைக்கப்பட்டிருந்தது. ஆகையால் மீளாய்வாண்டில் மூலதனக் கணக்கு ரூபா 337,000 ஆல் அதிகரித்துக்

காட்டப்பட்டதுடன் முதலீட்டு வட்டிக் கணக்கு அதே சமதொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) இலங்கை வங்கியிடமிருந்து கிடைத்த உறுதிப்படுத்தலின்படி, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரச நிறுவனங்கள் தற்காலிக மிகை நம்பிக்கை நிதியத்தின் மீதி ரூபா 301,257,161 ஆக இருந்த அதேநேரம் ஐந்தொகையின்படி, அது ரூபா 298,888,579 ஆக இருந்தது. ரூபா 2,368,582 ஆன வித்தியாசம் மீளாய்வாண்டினிறுதியிலுள்ளவாறு கிடைக்க வேண்டியதாக காட்டப்பட்டிருந்த போதிலும் அது வங்கியிலிருந்து கிடைத்த வட்டி என்பது அவதானிக்கப்பட்டது.

(ஊ) ரூபா 83,167 தொகையான கடன்கொடுத்தோரின் தீர்ப்பனவு தவறுதலாக மேம்பாட்டு வரி செலவினக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. ஆகையால் கடன்கொடுத்தொர் கணக்கு ரூபா 83,167 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டில் சபையின் பிராந்திய அலுவலகங்களிற்குக் கிடைத்த ரூபா 2,044,508 ஆன தொகையான அனுமதிப்பத்திரக் கட்டணங்கள், வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்து வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் காட்டப்பட்ட காசேட்டு மீதிகளிற்கும் தொடர்புபட்ட காசேடுகளில் காட்டப்பட்ட மீதிகளிற்குமிடையில் ரூபா 13,238 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐக்கிய அரபு எமிரெட்ஸ் (யூஏஈ) தூதரக நடைமுறைக் கணக்கிற்கும் இலங்கை ஐக்கிய அரபு எம்ரேட்சின் ஆலோசனையாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலிற்குமிடையில் ரூபா 155,130 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

### 1.2.3 கிடைக்க வேண்டிய மற்றும் கொடுபடவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையிடமிருந்து ஐந்து ஆண்டுகளிற்கு மேல் கிடைக்க வேண்டியதாகக் காட்டப்பட்ட ரூபா 25,000,000 தொகை

மீளாய்வாண்டு இறுதிவரையிற்கூட அறவிடப்பட்டிருக்கவில்லை. எனினும், அறவீடு சந்தேகமானதாக இருந்தமையால் நட்ட மற்றும் ஐயக்கடன்களின் கீழ் அந்தத் தொகைக்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) சீரீசீ தேயிலை உற்பத்தி செய்வதற்காக தொழிற்சாலையின் அபிவிருத்திக்கான கடனாக பதினைந்து ஆண்டுகளுக்கு மேல் களுபோவிற்றியானே கட்ரியர் அன்ட் கர்வ் (சீரிசீ) தேயிலைத் தொழிற்சாலையிடமிருந்து ரூபா 22,465,416 ஆன தொகை கிடைக்கவேண்டியதாக இருந்தது, எனினும், இரண்டு தரப்பினரிற்கிடையிலும் இக் கடன் தீர்ப்பனவு தொடர்பாக உடன்படிக்கை எதுவும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(இ) அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக 1995 இல் பொல்கேன தொழிற்சாலைக்கு வழங்கப்பட்ட ரூபா 4,329,769 ஆன உதவிப்பணம் குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாதிருந்ததுடன் அதனால் சபை அந்தத் தொகையை தொழிற்சாலையிலிருந்து கிடைக்கவேண்டியதாகக் கணக்கிட்டிருந்தது. இந்தத் தொகை மீளாய்வாண்டு இறுதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) அரசாங்க நிதிப்பிரமாணங்கள் | |
| - இல. 454 | பிரமாணத்தின்படி பொருள் பதிவேடுகளெதுவும் முறையாகப் பேணப்பட்டிருக்கவில்லை |
| - இல. 757(2) | 2010 ஆம் ஆண்டிற்கான கணிப்புச்சபை அறிக்கையின்படி மேலகதிகங்கள் மற்றும் பற்றாக்குறைவுகள் ஏட்டு மீதிகளுடன் ஒப்பிடப்பட்டு பிரமாணத்தின்படி மெய்மையாய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) திறைசேரி சுற்றுநிருபம் 1978 திசெம்பர் 12 ஆம் திகதிய இல. 842 — சுற்றுநிருப அறிவுறுத்தல்களின் படி நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு முறையாகப் பேணப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் தொழிற்பாட்டு நடவடிக்கைகள் விளைவித்திருந்த ரூபா 17,851,102 ஆன தேறிய மிகைக்கெதிராக முன்னைய ஆண்டிற்கான தேறிய பற்றாக்குறை ரூபா 24,502,265 ஆகும். அது நிதிசார் விளைவுகளில் ரூபா 42,353,367 ஆன முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. இந்த அதிகரிப்பு பிரதானமாக மீளாய்வாண்டிற்கான சபையின் உத்தரவுப் பத்திரக்கட்டணங்கள் மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் என்பவற்றின் அதிகரிப்புக் காரணமாக ஏற்பட்டிருந்தது.

### 2.1.1 பகுப்பாய்வு ரீதியான நிதிமீளாய்வு

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் செஸ் வருமானம் ரூபா 70,000,000 ஆல் குறைவடைந்திருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அபிவிருத்தி நடவடிக்கைகளிற்கான செலவினம் ரூபா 18,739,663 ஆல் அதிகரித்திருந்தது.

### 2.2 செயலாற்றல்

### 2.2.1 சபையின் செயற்பணிகள்

இலங்கையில் தேயிலைக் கைத்தொழிலின் நடடிவக்கைகளை ஒழுங்குபடுத்தல் இலங்கையில் மற்றும் வெளிநாடுகளில் ‘‘இலங்கைத் தேயிலை’’ இன் சந்தைப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல், தேயிலையில் சந்தை ஆராய்ச்சியை நடாத்துதல், தேயிலைக் கைத்தொழிலுக்கு சந்தை விவேகத்தை வழங்குதல் மற்றும் தேயிலை வர்த்தகத்துக்கான ஆய்வுகூட மற்றும் தொழிற்சேவைகளை வழங்குதல் என்பவற்றை சபையின் தேயிலை ஆணையாளர் பிரிவு தேயிலை ஏற்றுமதிப் பிரிவு, தேயிலை மேம்பாட்டுப் பிரிவு, பகுப்பாய்வு ஆய்வுகூடம் மற்றும் தேயிலை பரீட்சித்தல் அலகு என்பவற்றினூடாக செய்தல் சபையின் பிரதான செயற்பணிகளாகும். பௌதீக முன்னேற்றத்தின் விபரங்கள் முறையாக

தயாரிக்கப்பட்டிருக்காமையால் மீளாய்வண்டிற்கான அந்தப் பிரிவுகளின் நடவடிக்கைகளின் செயலாற்றலை உறுதிப்படுத்த முடியவில்லை.

### 2.2.2 தேயிலைக் கைத்தொழிலின் செயலாற்றல்

#### (அ) தேயிலை உற்பத்தி மற்றும் இலங்கையிலிருந்தான ஏற்றுமதி

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் கணக்காய்விற்குத் தரப்பட்ட தரவுகளின்படி, தேயிலை உற்பத்தி மற்றும் இலங்கையிலிருந்தான ஏற்றுமதி மற்றும் தேயிலை உற்பத்தி முன்னேற்றம் மற்றும் தேயிலை ஏற்றுமதி மேம்பாட்டிற்காக சபையால் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் என்பன கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | இலங்கையின் தேயிலை உற்பத்தி | தேயிலை உற்பத்தியை முன்னேற்றுவதற்காக இலங்கை தேயிலைச் சபையால் செய்யப்பட்ட அபிவிருத்தி செலவினம் | இலங்கையின் தேயிலை ஏற்றுமதிகள் (மீள் ஏற்றுமதிகள் உட்பட) | தேயிலை ஏற்றுமதியை அதிகரிப்பதற்காக சபையால் செய்யப்பட்ட மேம்பாட்டு செலவினம் | ஒரு கிலோ கிராமிற்கான உற்பத்திக் கிரயம் | ஒரு கிலோ கிராமிற்கான விற்பனை விலை |
|---|---|---|---|---|---|---|
| | கிலோகிராம் (மில்லியன்) | ரூபா | கிலோகிராம் (மில்லியன்) | ரூபா | ரூபா | ரூபா |
| 2007 | 304.6 | 23,725,332 | 309.9 | 92,815,993 | 210.75 | 279.52 |
| 2008 | 318.7 | 3,644,246 | 319.8 | 109,358,718 | 231.49 | 310.81 |
| 2009 | 291.1 | 24,552,506 | 289.7 | 102,286,182 | 269.01 | 360.45 |
| 2010 | 331.4 | 10,394,094 | 324.4 | 58,843,391 | 314.17 | 370.61 |
| 2011 | 328.6 | 29,133,757 | 322.6 | 25,755,657 | 350.00 (மதிப்பிடப்பட்டு) | 359.89 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தேயிலை அபிவிருத்திச் செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது ரூபா 18.74 மில்லியனால் அதிகரித்திருந்த போதிலும் இலங்கையில் தேயிலையின் உற்பத்தி 2.8 மில்லியன் கிலோகிராம்களால் குறைவடைந்திருந்தது.

(ii) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது தேயிலை ஏற்றுமதிகளும் 1.8 மில்லியன் கிலோகிராம்களால் குறைவடைந்திருந்தது.

(iii) முன்னைய ஆண்டுகளில் தேயிலை மேம்பாட்டு நடவடிக்கைகளை நடாத்திய பின்னர் பொலன்ட் ஜேர்மனி, கனடா மற்றும் பாங்கோக் ஆகிய தூதராலயக் கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்ட மீதிகள் ரூபா 588,679 ஆகும். சபை இந்த நிதிகளைப் பயன்படுத்தி இந்த ஆண்டிலும் ஏதாவது மேம்பாட்டு நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடாத்துவதற்கோ அல்லது சம்பந்தப்பட்ட தூதரகங்களிடமிருந்து மீதிகளை மீளப்பெறுவதற்கோ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) வெளிநாட்டு வர்த்தக சந்தைகளில் பங்குபற்றுதல்**

பிரதான தேயிலை இறக்குமதி நாடுகளில் நடைபெற்ற சர்வதேச உணவு மற்றும் மென்பானங்களில் சுத்தமான இலங்கைத் தேயிலை வர்த்தக குறியீட்டின் மேம்பாட்டுடன் தொடர்பான 2008 இலிருந்து ஒவ்வொரு ஆண்டிலும் சபையால் பொறுப்பேற்கப்பட்ட வெளிநாட்டு வர்த்தக மேம்பாட்டு வேலைகள் மற்றும் வழங்கப்பட்ட அனுசரணைகள் என்பன கீழே தரப்படுகின்றன.

| | 2011 | 2010 | 2009 | 2008 |
|---|---|---|---|---|
| சபையால் நடாத்தப்பட் பொருட்காட்சிகளின் எண்ணிக்கை | 15 | 18 | 25 | 35 |
| பங்குபற்றிய கம்பனிகளின் எண்ணிக்கை | 94 | 101 | 81 | 89 |

**(இ) பதிவு செய்யும் நடவடிக்கைகள்**

2008 இலிருந்து ஒவ்வொரு ஆண்டின் முடிவிலுள்ளவாறான பின்வரும் தேயிலை உற்பத்தியாளர்கள் மற்றும் வர்த்தகர்களை பதிவு செய்தல், சான்றளித்தல் மற்றும் உத்தரவுப் பத்திரங்களை வழங்குதல் என்பன கீழே தரப்படுகின்றன.

| பதிவு செய்தல் மற்றும் உத்தரவுப் பத்திரம் வழங்கல் | 2011 | 2010 | 2009 | 2008 |
|---|---|---|---|---|
| கிறின்லீவ் வர்த்தகர்கள் | 1914 | 1866 | 1703 | 1976 |
| தொழிற்படும் தேயிலை தொழிற்சாலைகள் | 695 | 712 | 697 | 669 |
| தேயிலை ஏற்றுமதியாளர்கள் | 217 | 347 | 325 | 295 |
| தேயிலை பொதி கட்டுவோர் | 392 | 375 | 351 | 231 |
| இறக்குமதியாளர்கள் | 164 | 57 | 51 | 171 |
| தேயிலை குதங்கள் | 406 | 359 | 229 | 295 |

| | | | | |
|---|---|---|---|---|
| வர்த்தகப் பெயர்கள் (சிங்க சின்னம்) | 451 | 96 | 94 | 83 |

**(ஆண்டு அறிக்கைகள் 2008 – 2011)**

**(ஈ) தேயிலை பரீட்சிக்கும் பிரிவின் நடவடிக்கைகள்**

தேயிலையை அகற்றும் ஏதாவது ஒரு கொடுக்கப்பட்ட புள்ளியில் ஐஎஸ்ஓ 3720 ஆகக் குறைந்த தர நியமம் / கண்காணிப்பைப் பேணுதல் மற்றும் நுகர்வோர் பொதிகளுக்கான வர்த்தக குறியீட்டு உற்பத்திகளிற்கான சிங்க இலச்சினை சான்றிதழ் வழங்குதல் என்பவற்றிற்காக தேயிலை பரீட்சிக்கும் பிரிவானால் ஒவ்வொரு ஆண்டிலும் மேற்கொள்ளப்பட்ட மாதிரி தேயிலை பரீட்சிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2011 | 2010 | 2009 |
|---|---|---|---|
| **தரக் கட்டுப்பாட்டுக்கான தேயிலைப் பரிட்சிதல்** | | | |
| - ஏலத்திற்கு முன் | 151,767 | 164,336 | 130,007 |
| - கப்பலில் ஏற்ற முன் | 4,981 | 6,183 | 6,620 |
| - இறக்குமதிக்கு முன் | 4,615 | 6,404 | 5,552 |
| - இறக்குமதிக்குப் பின் | 3,068 | 2,761 | 2,597 |
| தனியார் விற்பனை குழு மதிப்பீட்டின் உறுதிப்படுத்தும் சான்றிதழ் | 5,255 | 5,025 | 11,523 |
| நேரடி விற்பனைகளை உறுதிப்படுத்தல் | 1,550 | 1,470 | 1,349 |

**(உ) பகுப்பாய்வு ஆய்வுகூட சேவைகள்**

தேயிலை ஆணையாளர் பிரிவிலிருந்து உள்ளக ரீதியிலும் தேயிலை ஏற்றுமதியாளர்கள், இறக்குமதியாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்களிடமிருந்து வெளியக ரீதியிலும் பெறப்பட்ட மாதிரிகளிற்கான தர நியம சான்றிதழ்களை வழங்குவதன் மூலம் தர நியமங்கள் முகாமைத்துவத்தை முன்னேற்றும் நோக்கத்துடன் பேணப்படும் பகுப்பாய்வு ரீதியான ஆய்வுகூட சேவைகளினால் ஒவ்வொரு ஆண்டிலும் பரீட்சிக்கப்பட்ட மாதிரிகள் மற்றும் உழைக்கப்பட்ட வருமானம் என்பன பின்வருமாறிருந்தன.

| **ஆண்டு** | **பரீட்சிக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை** | **வருமானம்** |
|---|---|---|
| | | ரூபா |
| 2011 | 7,933 | 6,071,200 |
| 2010 | 7,025 | 4,171,600 |
| 2009 | 7,679 | 3,787,900 |
| 2008 | 8,741 | 867,375 |

**(ஆண்டு அறிக்கைகள் 2008 – 2010 மற்றும் வரைபு ஆண்டறிக்கை - 2011)**

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மாதிரிகளைப் பரீட்சிக்கும் ஆய்வு கூடத்தின் பதவியணிப் பற்றாக்குறையின் காரணமாக தேயிலை ஆராய்ச்சி நிறுவகத்தின் பதவியணியினரின் உசாத்துணை மற்றும் உதவி என்பன ஆய்வு கூடத்தின் தேறிய வருமானத்தில் 50 சதவீதமான கொடுப்பனவின் அடிப்படையில் 2011 ஒக்தோபரிலிருந்து பெறப்பட்டது.

(ii) நான்கு சந்தர்ப்பங்களில் ஆகக்குறைந்த தரத்திலும் குறைவாக இருந்தமையால் ஆய்வுகூடத்தால் நிராகரிக்கப்பட்ட ஏற்றுமதிக்காக செய்யப்பட்ட தேயிலைக்காக அனுமதி வழங்கப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அதன் அளவு மற்றும் மொத்த இருப்பின் பெறுமதி என்பன முறையே 41,131 கி.கி மற்றும் ரூபா 15,410,285 ஆக இருந்தன.

(iii) ஒரு ஏற்றுமதியாளரால் ஏற்றுமதி செய்யப்படவேண்டுமென தயாரிக்கப்பட்ட ரூபா 3,238,302 பெறுமதியான இருப்பு மனித நுகர்வுக்கு அவை உகந்ததல்ல என்பதனால் 2011 ஆகஸ்ட் 09 இல் ஆய்வுகூடத்தால் நிராகரிக்கப்பட்டிருந்ததென்று கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. எனினும் இந்த இருப்பு கணக்காய்வுத் திகதியான 2012 செப்தெம்பர் 30 வரை சபையால் மாற்றப்பட்டிருக்கவில்லை.

(iv) சபை 2010 ஆம் ஆண்டில் கிருமிகளின் மீதிகளை பகுப்பாய்வு செய்யும் உபகரணத்தை ரூபா 55,526,585 இற்காக கொள்வனவு செய்திருந்த போதிலும் சபையால் கணக்காய்வுத் திகதியான 2012 செப்தெம்பர் 30 வரை அத்தகைய பகுப்பாய்வுகளெதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை என்று அவதானிக்கப்பட்டதுடன் அந்த உபகரணம் இதுவரை பரிசீலனையிலேயே உள்ளது.

## 2.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் தொகைகள் நட்டங்களாக இலாபத்திற்கெதிராக பதிவழிக்கப்பட்டிருந்தன.

(அ) ரூபா 156,100 கூட்டு மொத்தத் தொகையான கிடைக்க வேண்டிய பிணை வைப்புக்கள் தொடர்புபட்ட ஆவணங்களின்மையால்.

(ஆ) தேயிலை மேம்பாட்டு அலுவலர்களிற்காக 1996 இல் மொஸ்கோவில் வழங்கப்பட்ட வதிவிடத்திற்கான ரூபா 314,720 தொகையான கிடைக்க வேண்டிய வாடகை வைப்பு தொடர்புபட்ட ஆவணங்கள் கிடைக்காமையால் பதிவழிக்கப்பட்டிருந்தது.

(இ) மொஸ்கோவில் தேயிலை மேம்பாட்டு அலுவலகத்திற்காக 1993 இல் செலுத்தப்பட்ட ரூபா 359,680 தொகையான வாடகை வைப்பு குறித்த திகதியில் வதிவிடத்தை வெற்றிடமாக்காமையால் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஜப்பானிலிருந்த, 2008 இல் மூடப்பட்ட தேயிலை மேம்பாட்டு பிரிவிலிருந்து திரும்பக் கொண்டு வரப்பட்ட வாகனத்தின் விற்பனையிலிருந்து ரூபா 1,210,000 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது. மேலும், முன்னைய ஆண்டுக் கணக்குகளின் மீள்மதிப்பீட்டு மிகைக்கெதிராக ரூபா 3,461,884 ஆன தொகை மீள்மதிப்பீட்டு நட்டமாக பதிலீடு செய்யப்பட்டிருந்தது.

## 2.4 பதவியணி நிலைமை

சபையால் சமர்ப்பிக்கப்பட்ட ஆளணிக் கிரய அறிக்கைகளின்படி, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் ஆளணி நிலைமை கீழே தரப்படுகின்றது.

| பதவி | அனுமதிக்கப்பட்ட ஆளணி | உண்மையான ஆளணி | வெற்றிடங்கள் | மேலதிக பதவிகள் |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 04 | 05 | -- | 01 |
| இரண்டாம் மட்டம் | 27 | 20 | 10 | 03 |
| மூன்றாம் நிலை மட்டம் | 193 | 151 | 48 | 06 |
| ஆரம்ப மட்டம் | 76 | 67 | 09 | -- |
| மொத்தம் | 300 | 243 | 67 | 10 |

(i) 2011 திசெம்பர் 01 ஆம் திகதிய டிஎம்ஸ்/சீ/2/02/62 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் கடிதத்தின்படி 300 ஊழியர்களின் எண்ணிக்கை அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அந்தச்சமயத்தில் சேவையிலிருந்த பதவிவகித்தோருக்கு தனிப்பட்ட முறையில் 10 எண்ணிக்கையான மேலதிகப் பதவிகளும் அங்கீகரிக்கப்பட்டது.

(ii) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பிரதி / உதவிப் பணிப்பாளர் (ஐரீ) சிரேஷ்ட கணக்காளர், பிரதி மற்றும் உதவி தேயிலை ஆணையாளர்கள், சட்ட அலுவலர், தொழில்நுட்ப உதவியாளர்கள் (ஆய்வுகூடம்) போன்றோர் உள்ளடங்கலாக 67 வெற்றிடங்கள் இருந்தன. சபையின் தொழிற்நுட்ப உத்தியோகத்தர்கள் சங்கம் புதிய ஆட்சேர்ப்புத் திட்டத்தின் மூலம் தேயிலைப் பரிசோதகர்கள் / உதவியாளர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டமை தொடர்பில் 2011 நொவம்பர் 24 இல் சபைக்கெதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தொடர்ந்திருந்தது. எனினும், 2012 யூலை 31 இல் உள்ளவாறு வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்தது.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

----------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேயிலை ஆணையாளர் பிரிவு இயங்கிய கட்டிடம் 2002 திசெம்பர் 31 இல் வறிதாக்கப்பட்டதுடன் வளவின் சொந்தக்காரரிடம் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 2.4 மில்லியன் தொகையான வாடகை முற்பணம் மீளாய்வாண்டு இறுதி வரைகூட சபையால் அறவிடப்பட்டிருக்கவில்லை. எனினும், இந்த நோக்கத்திற்காக மத்தியஸ்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக 2005 இலிருந்து 2011 மே 30 வரை ரூபா 2.8 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. 4 ஆண்டுகள் கடந்த பின்னர் 2009 இல் மத்தியஸ்த விசாரணைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் தீர்மானத்தின்படி, கட்டிடத்திற்கான சேதங்கள் மற்றும் திருத்தங்கள் நீங்கலாக ரூபா 1.8 மில்லியன் தொகை சபைக்கு கிடைக்க வேண்டியதாக இருந்தது. அதே நேரம் வளவின் சொந்தக்காரர், கட்டிடத்திற்கான சேதங்களிற்காக ரூபா 4.9 மில்லியன் கோரிக்கை செய்தும் 2003 சனவரி தொடக்கம் செப்தெம்பர் வரை குத்தகைக்கு கொடுப்பதற்கு கட்டிடத்தின் பிரதேசத்தை மீள்ஒப்படைக்கத் தவறியமைக்காகவும் 2008 ஒக்தோபரில் சபைக்கெதிராக இன்னொரு மத்திஸ்தரை நியமித்திருந்தார். தீர்மானத்துக்கு காத்திருக்க வேண்டியுள்ளது.

(ஆ) இலங்கை தேயிலைச் சபையின் ஒவ்வொரு பிரிவிலும் தேவைப்படும் செயற்பணிகளிற்கு ஆதரவான விசேடத்துவ பிரயோக மென்பொருள் மற்றும் தொடர்புபட்ட வன்பொருள் என்பவற்றை வழங்கி நிறுவுவதற்காக 2009

திசெம்பர் 31 வரை ஒரு தனியார் நிறுவனத்திற்கு சபையால் ரூபா 9,038,930 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2005 ஏப்ரல் 07 இல் இரு தரப்பினருக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 90 நாட்களிற்கிடையில் இந்த வலையமைப்பு முறைமையில் விநியோகம் மற்றும் நிறுவுதல் என்பன பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்று பட்டியல்படுத்தப்பட்டிருந்த போதிலும் இரு தரப்பிலுமுள்ள தவறுகள் காரணமாக 2008 ஏப்ரல் 01 வரை பூர்த்தி செய்யும் காலம் பரஸ்பரம் நீடிக்கப்பட்டிருந்தது. எனினும் இந்த நடைமுறை 2012 யூலை 30 வரையிற்கூட பூர்த்தி செய்யப்படாது நடைபெறும் வேலைகளாகக் கணக்குகளில் காட்டப்பட்டிருந்ததென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 2.6 தேயிலை மேம்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் தந்திரோபாயத்திற்கான வரி

2010 ஒக்தோபர் 27 இல் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் ஏற்றுமதி செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் தேயிலைக்கு ரூபா 3.50 என்ற வீதத்தில் தேயிலை ஏற்றுமதியாளர்களிடமிருந்து சபையால் 2010 நொவம்பர் 01 தொடக்கம் 2011 திசெம்பர் 31 வரையான காலத்தில் தேயிலை மேம்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் தந்திரோபாயத்திற்காக ரூபா 1,308.09 மில்லியன் தொகை சேகரிக்கப்பட்டிருந்தது. இதுதொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சேகரிப்பின் பிரதான நோக்கம் தேயிலை மேம்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் தந்திரோபாயமாக இருந்தபோதிலும் அந்தப் பணம் குறுங்கால முதலீடுகளில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் வட்டியாக ரூபா 66.44 மில்லியன் உழைக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஒரு முறையான திட்டம் மற்றும் முகாமைத்துவம் இல்லாமல் அத்தகைய சேகரிப்பில் ரூபா 25.75 மில்லியன் அல்லது 1.87 சதவீதம் மாத்திரம் 2011 ஆம் ஆண்டு வரை மேம்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மேம்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள் ரூபா 33.08 மிலியன் அல்லது 56.23 சதவீதத்தால் குறைவடைந்திருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான மேம்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளிற்காக ரூபா 1,150 மில்லியன் தொகை பாதீட்டு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தபோதிலும் ரூபா 25.75 மில்லியன் 2.2 சதவீதம் மாத்திரமே மீளாய்வாண்டில் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(உ) வர்த்தமானி அறிவித்தலின் 04 ஆம் பந்தியின்படி, சேகரிக்கப்பட்ட தொகை சபையின் மூலதன நிதியத்தின் ஒரு பகுதி என்று நிர்ணயிக்கப்பட வேண்டும். எனினும், நிதிக்கூற்றுக்களின்படி ரூபா 1,348.78 மில்லியன் தொகையான மிகுதிவரி நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) 2010 திசெம்பர் 15 தொடக்கம் 2011 திசெம்பர் 14 வரையான ஒரு ஆண்டு காலத்திற்காக 80 நாடுகளில் நடைமுறைப்படுத்தும் ''பாஸ்போட் சூடான பானம் (தேநீர்)'' என்ற மாதிரியின் கீழ் சந்தை விவேகத்தை உள்ளடக்கிய யூரோ மொனிற்றர் சர்வதேச பொதியைக் கொள்வனவு செய்வதற்கு இந்த வரியிலிருந்து ரூபா 2,132,243 (ஐ.அ.டொலர் 19,000) ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும், வரி நிதியத்திலிருந்து மேற்படி கொடுப்பனவிற்காக பணிப்பாளர் சபையிடமிருந்து குறிப்பான அனுமதி எதுவும் பெறப்பட்டிருக்கவில்லை என்று கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(எ) மேம்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கையாக தீவுக்கு உள்ளேயும் வெளியேயுமுள்ள வாடிக்கையாளர்களுக்கிடையில் விநியோகிப்பதற்காக ஒரு பிரசுரத்தை அச்சிடுவதற்காக மீளாய்வாண்டில் ஒரு தனியார் கம்பனிக்கு ரூபா 86,238 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும், பிரசுரத்தின் தோற்றம் தேயிலை சந்தைப்படுத்தல் தொடர்பில் முறையான நிலையிலிருக்கவில்லை என்று கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 3. பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு மற்றும் உண்மையானவற்றுக்கிடையில் குறிப்பிடத்தக்க முரண்கள் அவதானிக்கப்பட்டமை பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஒரு பயனுறுதிமிக்க கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வு நடைமுறையின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள் நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7) (ஏ) பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்ட எனது விபரமான அறிக்கை மூலம் சபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பிரிவுகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பதிவேட்டுப் பொருள்
(ஆ) கணக்கீடு
(இ) கிடைக்க வேண்டியவைகள் மற்றும் செலுத்த வேண்டியவைகள்
(ஈ) மேம்பாட்டு நடவடிக்கைகள்